முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2024 சனவரி

## (102) வியாபாரக் கணிதமும் புள்ளிவிபரவியலும்

(Business Mathematics and Statistics)

2024-02-18
காலை
[9.00 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*
  (7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வைநிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வைநிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (8) ***சூத்திரங்களைக் கொண்ட தாள்கள்*** *இணைக்கப்பட்டுள்ளன.*
  (9) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** $9x^2 - 25$

மேற்படி கோவையின் காரணிகளாவன :

(1) $(3x+5)(3x+5)$ (2) $3(x+5)$

(3) $3(x+5)^2$ (4) $(3x+5)(3x-5)$

(03 புள்ளிகள்)

**1.2** **சுதாகர்** என்பவர் ஆண்டிற்கு ஒருமுறை கூட்டப்படுகின்ற 8% வருடாந்த வட்டி வீதத்தை வழங்குகின்ற ஒரு நிலையான வைப்பில் ரூபா 400,000/- இனை முதலீடு செய்கிறார். 4 ஆவது ஆண்டின் இறுதியில் முதலீட்டின் மீதான மொத்த வட்டி (*கிட்டிய முழு எண்ணில்*):

(1) ரூபா 144,196/- (2) ரூபா 128,000/- (3) ரூபா 187,731/- (4) ரூபா 103,884/-

(03 புள்ளிகள்)

**1.3** உங்களுக்கு கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

$P(X) = 0.40$ $P(Y) = 0.55$ $P(X \cup Y) = 0.85$

மேற்படி தகவல்களின் அடிப்படையில் $P(X \cap Y)$ இன் பெறுமானம்:

(1) 0.30 (2) 0.10 (3) 0.45 (4) 0.64

(03 புள்ளிகள்)

**1.4** குடும்பம் ஒன்று 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்திய நான்கு வகையான அரிசிகளின் (P, Q, R, S) அளவுகள் (கிலோகிராமில்) கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன :

| அரிசி வகை / ஆண்டு | P | Q | R | S |
|---|---|---|---|---|
| 2022 | 25 | 28 | 30 | 40 |
| 2023 | 30 | 28 | 35 | 50 |

2022 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி, **S** வகையைச் சேர்ந்த அரிசியின் கணியச் சார்பைக் கணிக்குக :

(1) 80% (2) 56% (3) 225% (4) 125%

(03 புள்ளிகள்)

**1.5** ***x, y*** ஆகிய மாறிகள் தொடர்பான புள்ளிவிபரப் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

$\Sigma x = 293$, $\Sigma y = 60$, $\Sigma xy = 2{,}863$ , $\Sigma x^2 = 20{,}575$ , $\Sigma y^2 = 928$, $n = 5$

மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, "***x***" மற்றும் "***y***" ஆகியவற்றிற்கிடையிலான இணைபுக் குணகத்தைக் கணிக்குக.:

(1) -0.7955 (2) -0.7575 (3) -0.7759 (4) -0.7795

(03 புள்ளிகள்)

**1.6** 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்ற அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுடைய வயதுகள் தொடர்பாக அரசாங்க நிறுவனமொன்றின் பதிவேட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன :

| **வயது (ஆண்டுகளில்)** | 25 - 29 | 30 - 34 | 35 - 39 | 40 - 44 | 45 - 49 | 50 - 54 |
|---|---|---|---|---|---|---|
| **ஊழியர் எண்ணிக்கை (ஆண்டுகளில்)** | 20 | 35 | 20 | 10 | 10 | 5 |

வெளிநாடுகளுக்குச் சென்ற ஊழியர்களது வயதுகளின் இடையம் *(கிட்டிய முழு எண்ணில்)*:

(1) 25 (2) 37 (3) 26 (4) 34

(03 புள்ளிகள்)

**1.7** கீழ்வரும் அட்டவணை தனித்த எழுமாற்று மாறி $X$ இன் நிகழ்தகவுப் பரம்பலைக் காட்டுகிறது :

| $x$ | 66 | 67 | 68 | 69 | 70 | 71 |
|---|---|---|---|---|---|---|
| $P(X = x)$ | 0.2 | 0.1 | 0.15 | **a** | 0.25 | 0.05 |

"**a**" இன் பெறுமதியாக அமைவது :

(1) 0.15 (2) 0.20 (3) 0.25 (4) 0.30

(03 புள்ளிகள்)

**1.8** **தருமன்** என்பவர் ஆண்டிற்கு 16% வட்டி வழங்குகின்ற வங்கி ஒன்றில் ரூபா 55,000/- இனை முதலீடு செய்ய விரும்பினார். வட்டியானது காலாண்டிற்கு ஒரு முறை கூட்டப்படுமாயின், வருடாந்த விளைவு வட்டி வீதமாக (effective interest rate) அமையக்கூடியது :

(1) 16.98% (2) 16.88% (3) 16.64% (4) 16.20%

(03 புள்ளிகள்)

**1.9** **ரஞ்சன்** என்பவர் வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக வங்கி ஒன்றிலிருந்து ரூபா 2,000,000/- கடனொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் 12% வருடாந்த வட்டி வீதத்தில் சமமான ஆண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக 5 ஆண்டுகளில் இந்தக் கடனைச் செலுத்தி முடிப்பதற்கு இணங்கியுள்ளார். கடனின் வருடாந்த தவணைக் கொடுப்பனவாக அமைவது *(கிட்டிய முழு எண்ணில்)*:

(1) ரூபா 486,618/- (2) ரூபா 554,785/- (3) ரூபா 640,000/- (4) ரூபா 304,927/-

(03 புள்ளிகள்)

**1.10** 2016 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையிலான ஒரு தேயிலைத் தொழிற்சாலையின் காலாண்டு விற்பனைப் பெறுமானங்கள் கீழ்வரும் பருவகாலச் சுட்டிகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன :

| **பருவகாலம்** | **1 ஆவது காலாண்டு** | **2 ஆவது காலாண்டு** | **3 ஆவது காலாண்டு** | **4 ஆவது காலாண்டு** |
|---|---|---|---|---|
| **பருவகாலச் சுட்டி** | 1.12 | 0.88 | 0.95 | 1.05 |

2023 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டிற்கான மதிப்பிடப்பட்ட போக்குப் பெறுமானம் 1,265 ஆக இருப்பின், 4 ஆவது காலாண்டிற்காக எதிர்வுகூறப்படும் விற்பனைப் பெறுமானமாக அமைவது *(கிட்டிய முழு எண்ணில்)*:

(1) 1,205 (2) 1,328 (3) 1,202 (4) 1,331

(03 புள்ளிகள்)

**1.11** *தொடக்கம்* **1.13** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்தில் உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.11** கீழ்வரும் அட்டவணையில் இடது பக்கம் தரப்பட்டுள்ள பதங்களை வலது பக்கம் தரப்பட்டுள்ள பொருத்தமான விபரிப்புகளுடன் பொருத்தி, பதங்களுக்குரிய ஆங்கில எழுத்துகளை எழுதி அதன் எதிரே உரிய விபரிப்புகளுக்குரிய எண்களை எழுதுக :

| **பதம்** | **விபரிப்பு** |
|---|---|
| **(A)** பிசரின் சுட்டெண் | **(1)** காலப்பகுதி ஒன்றின் ஈறான காசுப் பாய்வுகளின் இற்றைப் பெறுமதி. |
| **(B)** நிகர இற்றைப் பெறுமதி | **(2)** அடிப்படை ஆண்டின் கணியங்கள் எடைகளாகத் தெரிவு செய்யப்பட வேண்டிய சுட்டெண். |
| **(C)** பருவகால மாறல் | **(3)** இலாஸ்பெயாரின் மற்றும் பாசேயின் சுட்டெண்களின் பெருக்கல் இடை. |
| **(D)** இலாஸ்பெயாரின் சுட்டெண் | **(4)** காலப்பகுதி ஒன்றுடன் தொடர்புடைய மீண்டும் மீண்டும் வருகின்ற நகர்வுகள். |

(01 புள்ளி வீதம், 04 புள்ளிகள்)

**1.12** கீழ்வரும் சலாகை வரைபானது மாணவன் ஒருவன் கடந்த 6 நாட்களில் தொலைக்காட்சி பார்த்த நிமிடங்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது :




செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் மாணவன் தொலைக்காட்சி பார்த்த நிமிடங்களின் மொத்த எண்ணிக்கையைக் கணிக்குக. (02 புள்ளிகள்)

**1.13** கீழ்வரும் கூட்டல் விருத்தியின் 10 ஆவது உறுப்பைக் காண்க :

$$0, \ \frac{1}{4}, \ \frac{1}{2}, \ \frac{3}{4}, \ \ldots\ldots\ldots\ldots\ldots$$ (02 புள்ளிகள்)

*கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் (**1.14, 1.15**) **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (**சரியானது**/ **தவறானது**) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக:*

**1.14** $y = 3 - 2x$ எனத் தரப்படுகின்ற பிற்செலவுக் கோட்டின் சமன்பாட்டில், மாறி $x$ இன் ஓர் அலகை அதிகரிக்கும்போது மாறி $y$ இன் 2 அலகுகள் அதிகரிக்கின்றன. (01 புள்ளி)

**1.15** இரண்டு மாறிகளுக்கிடையிலான இணைபுக் குணகம் -0.95 ஆக இருக்கும்போது இந்த மாறிகளுக் கிடையில் ஒரு வலுவான எதிர்மறையான நேர்கோட்டு இணைபு (strong negative linear correlation) காணப்படுகிறது எனக் கூறலாம். (01 புள்ளி)

(மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

(a) கம்பனி ஒன்றின் இலாபமானது ஒவ்வொரு ஆண்டும் அக்கம்பனியின் முந்தைய ஆண்டின் இலாபத்தைவிட 15% இனால் அதிகரிக்கிறது. இக்கம்பனி முதலாவது ஆண்டில் ரூபா 500,000/- இலாபத்தைச் சம்பாதித்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**
கம்பனி 4 ஆவது ஆண்டில் சம்பாதிக்கின்ற இலாபத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **அநுரா** என்பவர் மொத்தக் கிரயம் ரூபா 7,042/- இற்கு கம்பனி **A** இடமிருந்து 61 பங்குகளையும் கம்பனி **B** இடமிருந்து 80 பங்குகளையும் கொள்வனவு செய்திருந்தார். **வசந்தா** என்பவர் மொத்தக் கிரயம் ரூபா 3,346/- இற்கு கம்பனி **A** இடமிருந்து 61 பங்குகளையும் கம்பனி **B** இடமிருந்து 14 பங்குகளையும் கொள்வனவு செய்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**
ஒவ்வொரு கம்பனிப் பங்கினதும் கிரயத்தைக் (விலையை) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **நுவான்** என்பவர் பெறுமதிசேர் வரி (VAT) இன்றி ரூபா 840/- இற்கு கையடக்கத் தொலைபேசிக்கான மின்னேற்றல் உபகரணம் ஒன்றை வாங்குவதற்குத் திட்டமிடுகிறார். இதற்கு 15% பெறுமதிசேர் வரி விதிக்கப்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**
**நுவான்** இந்த மின்னேற்றல் உபகரணத்தை வாங்குவதற்கு மொத்தமாகச் செலுத்த வேண்டிய தொகையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

நிறுவனமொன்றின் மாதமொன்றிற்கான மொத்தக் கிரயச் (TC) சார்பும் கேள்விச் சார்பும் (P) கீழே தரப்பட்டுள்ளன :

$$\text{TC} = 13q^2 + 5q - 1{,}000$$

$$\text{P} = 13q - 20$$

இங்கு "$q$" என்பது மாதத்தின் காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனத்தின் மொத்த வருமானச் (TR) சார்பையும் எல்லைக் கிரயச் (MC) சார்பையும் **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) நிறுவனம் 50 அலகுகளை உற்பத்தி செய்யும்போது நிறுவனத்தின் எல்லைக் கிரயத்தைக் (MC) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(c) இலாப – நட்டமற்ற கணியத்தைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

உணவகமொன்றின் உரிமையாளர் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவு வகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு விரும்புகிறார். இதனால் ஒவ்வொரு வாரமும் உணவுப் பட்டியலிலுள்ள உணவுகளின் எண்ணிக்கைகளை மாற்றி வாடிக்கையாளர்களின் திருப்தியை தரப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும் உணவுகளின் எண்ணிக்கையை $(x)$ எனவும் சராசரியான வாடிக்கையாளர் திருப்திக்கான தரப்படுத்தலை 1 முதல் 10 வரையான $(y)$ அளவுத்திட்டத்திலும் குறிப்பிட்டார். இங்கு 10 என்பது மிகச் சிறப்பானது ஆகும். 8 வாரங்களுக்குப் பெறப்பட்ட தரவுகளின் பொழிப்பு கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :

| **உணவுகளின் எண்ணிக்கை $(x)$** | 15 | 18 | 22 | 23 | 24 | 20 | 17 | 16 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வாடிக்கையாளர் திருப்திக்கான தரப்படுத்தல் $(y)$** | 10 | 8 | 6 | 6 | 7 | 8 | 9 | 10 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி :

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) உணவுகளின் எண்ணிக்கை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டக்கூடிய $y = \mathrm{a} + \mathrm{b}x$ என்ற வடிவிலான இழிவு வர்க்க முறை பிற்செலவுக் கோட்டினை **அடையாளம் காண்க.** (08 புள்ளிகள்)

(b) குறிப்பிட்டதொரு வாரத்தில் 19 உணவுகளை அவர் வழங்குவாராயின், எதிர்பார்க்கப்படும் வாடிக்கையாளர் திருப்தியின் தரப்படுத்தலைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

கீழ்வரும் அட்டவணை 2023 நவெம்பர் மாதத்திற்கான மழைவீழ்ச்சியை (மில்லிமீற்றரில்) காட்டுகிறது :

| **மழைவீழ்ச்சி (mm)** | 50 - 59 | 60 - 69 | 70 - 79 | 80 - 89 | 90 - 99 | 100 - 109 |
|---|---|---|---|---|---|---|
| **நாட்களின் எ/கை $(f)$** | 3 | 4 | 2 | 9 | 5 | 7 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வரும் மழைவீழ்ச்சி அளவிடைகளைக் **கணிக்குக** :

(a) ஆகாரம் (03 புள்ளிகள்)

(b) இடை (03 புள்ளிகள்)

(c) நியம விலகல் (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) **மனோஜ்** என்பவர் ஆண்டிற்கு 12% வட்டி வீதத்தில் 4 ஆண்டுகளுக்கு வங்கியொன்றிலிருந்து கடனொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளார். இக்கடனானது ரூபா 65,848/- என்ற சமமான வருடாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தி முடிக்கப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **மனோஜ்** இனால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) கடன் மீள்கொடுப்பனவை விளக்குகின்ற கடன் மீளளிப்பு அட்டவணையைத் (amortization schedule) **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) **மல்லிகா** என்பவர் 2 முதலீட்டுத் தெரிவுகளிலிருந்து (**A** மற்றும் **B**) சிறந்த முதலீட்டுத் தெரிவைத் தேர்வு செய்யத் திட்டமிடுகிறார். தெரிவுகள் **A** மற்றும் **B** இற்கான ஆரம்ப முதலீட்டுக் கிரயம் முறையே ரூபா 1,800,000/- மற்றும் ரூபா 1,400,000/- ஆகும். இவ்விரு தெரிவுகளுக்கும் அடுத்த 3 ஆண்டுகள் காலப்பகுதிக்கான நிகர காசு உட்பாய்வுகள் கீழே தரப்பட்டுள்ளன :

| ஆண்டு / தெரிவு | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| **A** | 400,000 | 800,000 | 1,000,000 |
| **B** | 500,000 | 600,000 | 800,000 |

கம்பனியின் கழிவீட்டுக் காரணி (மூலதனக் கிரயம்) ஆண்டிற்கு 10% ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொரு தெரிவினதும் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) NPV இன் அடிப்படையில், சிறந்த முதலீட்டுத் தெரிவை காரணங்களுடன் **அடையாளம் காண்க.** (02 புள்ளிகள்)

(C) கீழ்வரும் 3 வகையான பிளாஸ்ரிக் இலிருந்து உருவாக்கப்படும் போத்தல்களை எவ்வாறு அகற்றுவது என்பது பற்றிய விபரங்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| பிளாஸ்ரிக் வகை | போத்தல்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | சரியாக அகற்றப்பட்டவை | சரியாக அகற்றப்படாதவை |
| **A** | 12 | 5 |
| **B** | 8 | 7 |
| **C** | 6 | 12 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) எழுமாறாக ஒரு போத்தல் தெரிவுசெய்யப்படும்போது அது **பிளாஸ்ரிக் A** இனால் உருவாக்கப்பட்டதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட போத்தலானது **சரியாக அகற்றப்படாத** போத்தல் எனத் தரப்படின், அப்போத்தல் **பிளாஸ்ரிக் B** இனால் உருவாக்கப்பட்ட போத்தலாக இருப்பதற்கான நிகழ்தகவைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(D) கம்பனி ஒன்றில் பணியாற்றும் 2,000 கீழ்நிலைப் பணியாளர்களின் வாராந்த மேலதிக நேரக் கொடுப்பனவானது ரூபா 7,020/- என்ற இடையையும் ரூபா 90/- என்ற நியம விலகலையும் கொண்ட ஒரு செவ்வன் பரம்பலாக உள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வாராந்த மேலதிக நேரக் கொடுப்பனவு ரூபா 7,200/- இற்கு மேல் பெறுகின்ற கீழ்நிலைப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வைநிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |

# சூத்திரங்கள்

## கணித அடிப்படைக் கோட்பாடுகள்:

இருபடிச் சமன்பாடு:

$ax^2 + bx + c = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் தீர்வுகள் பின்வருமாறு தரப்படும்

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

கூட்டல் விருத்தி:

n ஆவது உறுப்பு :

$T_n = a + (n-1)d$

முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகை :

$$S = \frac{n}{2}\{ 2a + (n-1)d\}$$

பெருக்கல் விருத்தி:

n ஆவது உறுப்பு :

$T_n = ar^{(n-1)}$

முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகை:

$S = a\frac{\{r^n - 1\}}{\{r-1\}}$ $r > 1$ ஆகும்போது

$S = a\frac{\{1 - r^n\}}{\{1 - r\}}$ $r < 1$ ஆகும்போது

$S = na$ $r = 1$ ஆகும்போது

## நிதிக் கணியம் :

எளிய வட்டி:

$S = X(1 + nr)$

கூட்டு வட்டி:

$S = X\{1 + r\}^n$

கழிவு:

இற்றைப் பெறுமதி =

எதிர்காலப் பெறுமதி $\times \frac{1}{(1+r)^n}$

ஈட்டின் / கடனின் மீள்கொடுப்பனவு :

$$A = \frac{SR^n(R-1)}{\{R^n - 1\}}$$

விளைவு வட்டி வீதம்:

EIR = $\{(1+r)^n - 1\}$ 100%

## எண்சார் விளக்க அளவிடைகள்:

இடை $\bar{x}$ :

கூட்டமாக்கப்படாத தரவு: $\frac{\sum x}{n}$

கூட்டமாக்கப்பட்ட தரவு : $\frac{\sum fx}{\sum f}$

இடையம் :

கூட்டமாக்கப்படாத தரவு: $M_d = \frac{(n+1)}{2}$ ஆவது உறுப்பு

கூட்டமாக்கப்பட்ட தரவு $M_d = L_1 + \left(\frac{\frac{n}{2} - F_c}{f_m}\right) \times C$

ஆகாரம்

கூட்டமாக்கப்பட்ட தரவு $M_0 = L_1 + \frac{\Delta_1}{\Delta_1 + \Delta_2} \times C$

நியம விலகல் $\sigma$:

கூட்டமாக்கப்படாத தரவு :

$$\sqrt{\frac{\sum(x - \bar{x})^2}{n}} \quad \text{or} \quad \sqrt{\frac{\sum x^2}{n} - \bar{x}^2}$$

கூட்டமாக்கப்பட்ட தரவு :

$$\sqrt{\frac{\sum f(x - \bar{x})^2}{\sum f}} \quad \text{or} \quad \sqrt{\frac{\sum fx^2}{\sum f} - \bar{x}^2}$$

மாறல் குணகம் (CV):

$$\frac{\text{நியம விலகல்}}{\text{இடை}} = \frac{\sigma}{\bar{x}} \times 100$$

ஓராயக் குணகம் $= \frac{3(\text{இடை} - \text{இடையம்})}{\text{நியம விலகல்}}$

## இரு மாறும் கணியங்களின் ஒப்பீடு :

பியர்சனின் பெருக்கல் திருப்ப இணைபுக் குணகம்

இணைபுக் குணகம் (r):

$$\frac{[n\sum xy - \sum x \sum y]}{\sqrt{\{[n\sum x^2 - (\sum x)^2] \times [n\sum y^2 - (\sum y)^2]\}}}$$

இழிவுவர்க்க முறை பிற்செலவுக் கோட்டின் குணகம் (a, b):

$$b = \frac{[n\sum xy - \sum x \sum y]}{[n\sum x^2 - (\sum x)^2]}$$

$a = \bar{y} - b\bar{x}$

## சூத்திரங்கள் *(தொடர்ச்சி)*

### பொருளாதார மாறிகளுடனான மேலதிக நேர ஒப்பீடு

சுட்டெண்கள் :

விலைச் சார்பு $= \frac{p_1}{p_0} \times 100$

கணியச் சார்பு $= \frac{q_1}{q_0} \times 100$

பெறுமானச் சார்பு $V_{1/0} = \frac{\sum p_1 q_1}{\sum p_0 q_0} \times 100$

எளிய திரள் விலைச் சுட்டி $= \frac{\sum p_1}{\sum p_0} \times 100$

எளிய திரள் கணியச் சுட்டி $= \frac{\sum q_1}{\sum q_0} \times 100$

சராசரி விலைச் சார்பு $= \frac{1}{n} \sum \frac{p_1}{p_0} \times 100$

சராசரி கணியச் சார்பு $= \frac{1}{n} \sum \frac{q_1}{q_0} \times 100$

நிறையேற்றப்பட்ட திரள் சுட்டிகள்

1) அடிப்படை நிறையேற்றப்பட்ட/ இலாஸ்பெயாரின்:

விலைச் சுட்டி $= \frac{\sum p_1 q_0}{\sum p_0 q_0} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1 p_0}{\sum q_0 p_0} \times 100$

2) தற்போதைய நிறையேற்றப்பட்ட/ பாசேயின்:

விலைச் சுட்டி $= \frac{\sum p_1 q_1}{\sum p_0 q_1} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1 p_1}{\sum q_0 p_1} \times 100$

3) நியம நிறையைப் பயன்படுத்தல்

விலைச் சுட்டி $= \frac{\sum p_1 w}{\sum p_0 w} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1 w}{\sum q_0 w} \times 100$

சார்புகளின் நிறையேற்றப்பட்ட சராசரி

விலைச் சுட்டி $= \frac{\sum[w \times I_p]}{\sum w} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum[w \times I_q]}{\sum w} \times 100$

காலத் தொடர்:

பெருக்கல் மாதிரி

Y = T X S X C X R

### தொடையும் நிகழ்தகவும்

∪ - ஒன்றிப்பு; A∪B என்பது A யில் உள்ள எல்லா மூலகங்களையும் B யில் உள்ள எல்லா மூலகங்களையும் குறிப்பிடுவதுடன் எந்த மூலகங்களும் இரு முறை வராது.

∩ - இடைவெட்டு; A∩B என்பது A, B என்ற இரு தொடைகளிலும் உள்ள மூலகங்களைக் குறிக்கும்.

P (A) – A எனும் நிகழ்வுக்கான நிகழ்தகவு

P (A/B) – B எனும் நிகழ்வு தரப்படும்போது A எனும் நிகழ்வுக்கான நிகழ்தகவு

பொது விதிகள்:

P (A∪B) = P (A) + P (B) – P (A∩B)

$P(A/B) = \frac{P(A \cap B)}{P(B)}$

பின்னக எழுமாற்று மாறி ஒன்றின் எதிர்வுப் பெறுமானமும் மாறல் திறனும்:

$E(X) = \sum(probability \times pay\ off) = \sum p \times x$

$VAR(X) = \sum px^2 - (\sum px)^2$

செவ்வன் பரம்பல்:

$Z = \frac{x - \mu}{\sigma}$